அனுப்புநர்

திரு.சித.வீரமணி, எம்.எஸ்ஸி.,எம்.எட்.,
மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர்
விருதுநகர்.

பெறுநர்

திரு.கோயில்ராஜ்
த/பெ ஜெயராஜ்,
நல்லூர்,
கோழிப்பாறை போஸ்ட்,
பாலக்காடு மாவட்டம்,
கேரளா.

ந.க.எண் 377 /அ/2017 நாள் .11.2017

அய்யா,

பொருள்: புகார் மனு – தூத்துக்குடி மாவட்டம் – சாத்தான்குளம், மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி – பள்ளி அமைவிடம் சார்பான புகார் கடிதம் பெறப்பட்டது– விசாரணை அறிக்கை அனுப்புதல் – சார்பு.

பார்வை 1.திரு.கோயில்ராஜ், த/பெ ஜெயராஜ், நல்லூர், கோழிப்பாறை போஸ்ட், பாலக்காடு மாவட்டம்இ கேரளா என்பவரின் மனு நாள் 20.09.2017

2. விருதுநகர் மாவட்ட மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அவர்களின் பள்ளி நேரடி விசாரணை நாள் 14.11.2017

ூூூூ

பார்வை 1ல்காணும் புகார் கடிதத்தின்படி தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் , மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி அமைந்துள்ள இடம் சார்பாகப் புகார் பெறப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனுவில் பள்ளி அமைவிடம், திரு.இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் புனித ஜோசப் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளின் விளையாட்டு இடமாக உள்ளதாகவும் புகார் பெறப்பட்டது. அப்புகாரின் அடிப்படையில் மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர் அவர்களால் 14.11.2017 அன்று பள்ளியில் நேரடியாக விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில் மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி பாளையங்கோட்டை பதிவு மாவட்டம், சாத்தான்குளம் உட்பிரிவு மாவட்டம், சாத்தான்குளம் வட்டம் சர்வே எண் 3/ இல் விஸ்தீரணம் 1.50.00, 3 ஏக்கர் 70.5 சென்ட் நிலம் பள்ளி செயல்பட தனியாக ஒதுக்கீட செய்து ஆவணம் பெறப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கான நிலம் தூத்துக்குடி கத்தோலிக்க மறை மாவட்டம் டையோசியேசன் அசோசியேசனிடமிருந்து 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்குப் பெறப்பட்டு குத்தகை ஆவணம் ( Lease deed) பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி செயல்படும் இடம் சார்ந்து வில்லங்கச்சான்று (Encumbrance certificate) 30 ஆண்டுகளுக்கு சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ளது. வில்லங்கச்சான்றின்படி பள்ளிக்கான இடத்தில் விளையாட்டு மைதானமாக செயல்பட உரிய ஆவணம் எதுவும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்பது தெளிவாகிறது. புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பள்ளிக்கான இடம் வேறு நிதி உதவி பெறும் பள்ளிக்கு விளையாட்டு மைதானமாக செயல்படுவதற்கு ஆவணம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்பதை மனுதாரருக்கு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

..2..

Scanned by CamScanner

மேலும் தூத்துக்குடி கத்தோலிங்கக மறைமாவட்ட ஆயர் அவர்களின் கடிதத்தில் இந்த சிறுபான்மை நிறுவனத்திற்கு உட்பட்ட (1) திரு இருதய பெண்கள் மேல்நிலைப்பள்ளி, (2) புனித ஜோசப் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் (3) மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் சார்பான இடம் மற்றும் பதிவு விவரங்கள் பெறப்பட்டுள்ளது.

அதில் பள்ளிகளுக்கு தனித்தனியாக விளையாட்டு இடம் ஒதுக்கீடு செய்தும் குத்தகை ஆவணம் 30 ஆண்டுகளுக்குப் பதிவு செய்த விவரமும் பெறப்பட்டுள்ளது. அதன் விபரம் கீழ்க்கண்டவாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

| வ.எண் | பள்ளிகளின் பெயர் | பரப்பளவு | சர்வே எண் |
|---|---|---|---|
| 1 | புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானம் | ஏக்கர் 1 செண்ட் 18.5 | 3/1A2 |
| 2 | மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளி பள்ளி அமைவிடம் | ஏக்கர் 3, செண்ட் 70.5 | 3/9 |
| 3 | விளையாட்டு மைதானம் திரு இருதய மேல்நிலைப்பள்ளி | ஏக்கர்1, செண்ட் 89 | 3/1A4 |

மேற்கண்ட விபரங்களின்படி புனித ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கும் திரு இருதய ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்குமான விளையாட்டு மைதானம் மற்றும் மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளிக்குமான இடம் சார்ந்த குத்தகை ஆவணங்களின்படி சர்வே எண்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக உள்ளது. இவை ஒன்றுக்கொன்று சம்மந்தம் இல்லாதது என்பது குத்தகை பதிவு ஆவணங்களின்படி தெளிவாகி உள்ளது.

மேலும் மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு துவக்க அனுமதி கோரி பெறப்பட்ட விண்ணப்பம் மற்றும் கருத்துருக்களிலுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்ததிலும் பள்ளிக்கான கட்டிட உறுதிச்சான்று, கட்டிட உரிமச்சான்று, தீத்தடுப்புச்சான்று, மற்றும் சுகாதாரச்சான்றுகளின் அடிப்படையிலும் , தூத்துக்குடி உள்ளூர் திட்டக் குழுமத்தினால் ஒப்புதல் செய்து வழங்கப்பட்ட கட்டிடம் கட்ட வரைபட அனுமதி ஆணை மற்றும் இதர ஆவணங்களின் அடிப்படையிலும் சான்றுகளின் அடிப்படையிலும் மேரி இம்மாக்குலேட் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு மெட்ரிக் பள்ளிகள் இயக்குர் அவர்காளல் துவக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்கிற விவரம் மனுதாரருக்கு இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

14/11/17

மெட்ரிக் பள்ளிகள் ஆய்வாளர்,
விருதுநகர்.

14/11/17

நகல்

1. சென்னை–6, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner